
www.padippakam.com

# உறவு

## மார்க்சிய தத்துவ இதழ்

தாஸ்னா பதிவு எண் : 230 / 18 / 99

ஜுலை 2000 இதழ் - 10 விலை : ரூ. 5-00



- ❖ தாராளமயமாக்கத்தை ஆதரிப்பதா? எதிர்ப்பதா?
- ❖ தனியார்மயம் - சில திறனாய்வு குறிப்புகள்
- ❖ உறவு'ன் பார்வை திரோத்ச்சிய வாதமா?

## கடிதங்களும் பதில்களும்



(திருச்சியைச் சேர்ந்த தோழர் பாட்டாளி, தாஸ்னா தலைவர் குன்றம் மு. இராமரத்நம், திறனாய்வாளர் வல்லிக்கண்ணன்)—

மின் அஞ்சல் : uravu@rediffmail.com.

படிப்பகம்

www.padippakam.com



# முந்தைய 'உறவு'களில் வெளிவந்த படைப்புக்கள்

இதழ் - 1 தாராளமயமாக்கலும் கம்யூனிஸ்டுகளும்.

இதழ் - 2 புரட்சிகரமான தத்துவம் மார்ச்சியமா? பின் நவீனத்துவமா?

இதழ் - 3 "மார்க்சிய லெனினிய இயக்கத்தில் நிலவும் மாபெரும் மூன்று நோய்கள்" எல்.ஜி.எஸ் க்கு ஒரு எதிர்வினை.

இதழ் - 4 அ.மார்க்சின் - உடைபடும் புனிதங்கள் தேசியம் ஓர் கற்பிதங்கள் - எதிர்வினை.

இதழ் - 5 (அ) ம.ஜ.இ.க.விற்கு ஒரு கடிதம்

(ஆ) நந்தனின் பூர்வீக இன வாதமா? மார்க்சியமா?

இதழ் - 6 (அ) அ.மார்க்ஸ் பற்றிய 'உறவு' பார்வைக்கு சண்முகநாதன் விமர்சனமும் எமது பதிலும்

(ஆ) தோழர் சிலப்பதிகாரத்தின் தனியார் மயமாக்கல் எதிர்ப்பும் 'உறவு'ன் விமர்சனமும்.

(இ) தோழர் சிலப்பதிகாரத்தின் இன்றைய் தொழில் துறை குறித்து நிலைப்பாடும் உறவு-ன் விமர்சனமும்.

இதழ் - 7 தோழர் கருணா மனோகரனின் - மார்க்சிய கோட்பாடும் இன்றைய உலகமும் எனும் கட்டுரைக்கு எதிர்வினை.

இதழ் - 8 (அ) ம.க.இ.க. மான்

(ஆ)

இதழ் - 9 தனியார் மயமாக்கல் புதிய பார்வை

| | |
|---|---|
| அனைத்து தொடர்புக்கும் :<br>கா.சே.பாலசுப்பிரமணியன்<br>6/5, கீழக்கொரட்டியார் தெரு,<br>காரைக்குடி - 630 001.<br>தொ.பே. (பீ.பீ) 04565 - 36765 | தனி இதழ் :<br>ரூ. 5-00<br>ஓராண்டு சந்தா :<br>ரூ. 50-00<br>(தபால் செலவு உட்பட) |

படிப்பகம்

www.padippakam.com



# நீங்கள் எங்களுக்கு

**23/7/99, சிவகங்கை.**

***அன்பின் தோழருக்கு,***

இதழ் 7-ஐ தோழர் ஜீவா கொடுத்தார். மிகவும் சிறப்பானதொரு கட்டுரை. மார்க்சிய ஆய்வாளர்கள் அருகிவிட்ட சூழலில் கருணமனோகரனின் அடிப்படை தவறிய கட்டுரைக்கான தங்களின் பதில் மிகுந்த நம்பிக்கையைத் தருகிறது. 'கருத்துச் சொல்லாமல் அலட்சியமாக ஒதுக்குவது' என்ற பாதகமான போக்கை அமைப்புக்கள் கொண்டிருக்கிற வேளையில் இதுபோன்ற பதில்களும் வராது போனால் வரும் தலைமுறைக்கு இழைக்கப்படும் பெரும் துரோகத்திற்கு நாமும் பங்களித்தவர்கள் ஆகிவிடுவோம். முன்னர் நாம் செய்த ஏற்பாட்டிற்கான காலம் நெருங்குவதாகவே இப்போது உணர்கிறேன். இதழ் 6 எனக்கு அவசியம் தேவை. அனுப்பி வைக்கவும். உங்கள் முயற்சிகள் தொடரட்டும். உங்களுக்கு நான் செய்ய வேண்டிய பணிகள் சில உள்ளன. செய்வேன். நன்றி!

**குருசாமி மயில்வாகனன்**
சிவகங்கை.

**பொள்ளாச்சி, 26-7-99**

***அன்புடையீர் வணக்கம்.***

நலம் தானே! தங்களின் உறவு இதழ் எண் 7 கிடைத்தது. மிகவும் மகிழ்தேன். தங்களின் இதழ் எனது தொகுப்பில் 2326-வது வகையான இதழாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. மார்க்சியத் தத்துவத்தை உள்வாங்கி, அத்தத்துவத்தின் வழி - நடப்பியல்புகளை உற்று நோக்கித் திறனாய்வு செய்வதும், அதன் வழியிலான கருத்தை முறைப்படுத்தி - அச்சாக்கி சுற்றுக்கு விடுவதும் சிறப்பாக உள்ளது. ஒவ்வொரு இதழிலும் ஒருகுறிப்பிட்ட தலைப்பெடுத்து அதன் வழியிலான அலசல்களைச் சிறப்பாகச் செய்து முறைப்படுத்துவதும் நல்லதே. தீவிர எழுத்து அலசல்கள் பல கூர்சீவல்களுக்கு உதவுவதே. தங்கள் இதழ் பலதரமானவர்களை உருவாக்க வாழ்த்துக்கள்!

**பொள்ளாச்சி நசன்,**
பொள்ளாச்சி.

**திருச்சி, 15-11-99**

***அன்புடையீர் வணக்கம்!***

உறவு நவம்பர் இதழ் கிடைத்தது. மார்க்சிய தத்துவ இதழ் என்பதற்கு ஏற்ப தனித்துவ போக்கோடு வருவது அருமை. ஆனால் இந்த தனிப்போக்கே இதழை பாதித்துவிடக் கூடாது. மார்க்சிய படைப்பிலக்கியங்களையும் இணைத்துக் கொள்ளும்போது அது இதழாகிறது.

எடுத்துக் கொள்ளப்பட்ட இரண்டு கருத்துக்களையும் செம்மையாக ஆய்வு செய்து இருக்கிறீர்கள்.

இதழ் வளர வாழ்த்துக்கள்!

**தி.மா: சரவணன்,**
திருச்சி.

படிப்பகம்

www.padippakam.com



**அறந்தாங்கி, 13-11-99**

அன்புள்ள உறவு. இதழ் ஆசிரியத்தோழர் அவர்களே! உறவு இதழில் தங்கள் கட்டுரைகள் இரண்டையும் படித்தேன். அதில் ம.க.இ.க.விற்கு "ஒரு கடிதம் என்ற கட்டுரையில், நீங்கள் விளக்கம் கொடுத்திருக்கும், எழுத்தின் நடை சிறப்பாக இருக்கிறது. உங்கள் புரிதல் அதை நீங்கள் எடுத்துச் சொன்ன விதத்தில் 90% வரை ஒத்துப்போகும் என்போன்றோர் கடைசியில் மறுத்து பதிலுரைக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தி விட்டீர்கள்.

முதலாளித்துவ நடைமுறைகள், சாதிய பாகுபாடுகளை, ஒழிக்கிறது. கிராமப்புற, கூலிகள், சிறுவிவசாயிகள் - ஏன் பணக்கார விவசாயிகளைக் கூட, பண்ணையடிமைகளாக அல்லது நகரங்கள் நோக்கிச் சென்று சொத்து அற்ற பாட்டாளிகளாக மாற்றம் செய்கிறது. எனவே முதலாளித்துவ நடைமுறைகளை, ஆய்வு முறைகளோடு எதிர்க்க வேண்டும் என்ற நோக்கில் எழுதி உள்ளீர்கள். நீங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட பொருள் - அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனியை விரட்டி அடிப்போம். என்கிற பிரசுரத்திற்கானது தான் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய தோழர் என்பது உங்கள் எழுத்துக்கள் புலப்படுத்துகிறது. எனவே தான் புரிந்து கொண்டும் வக்கீல்கள் - தங்கள் கட்சிக்காரர்களும் - மற்றவர்கள் அல்லது எதிர்தரப்பார் குற்றமற்றவர்களாக இருந்தாலும் குற்றவாளிகள் என்று வாதாடுவதைப் போன்று எழுதி உள்ளீர்கள்.

பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம், காலப் போக்கில் மார்க்சியமெனும் சமூக விஞ்ஞானத் தோற்றம் அதன் பின், அக்டோபர் புரட்சியின் வெற்றி, சீனப்புரட்சியின் மாவோவின் நடைமுறைச் செயல்பாட்டின் மாபெரும் வெற்றி, இதற்குப்பின்னால் உலகம் முழுவதும் உள்ள முதலாளித்துவ சக்திகள் ஒன்று சேர்ந்து, பாட்டாளி வர்க்க நலனை முன்னெடுக்கும் சக்திகளை, எதிர்த்து உயிரைப் பிறக்கும் வேலைகளோடு - கருத்து ரீதியாகவும், நட்புக் கொண்டும் ஒழித்துக் கட்டும் வேளைகளையும் இன்று வரை செய்து வருகிறது.

முதலாளித்துவம்... கடவுள், மதங்கள் அரசுத்தன்மைகளை எதிர்த்து சமர்புரிந்த காரணங்களால் தான் அக்டோபர், சீனப்புரட்சி கண்ட (கம்யூனிசப் புரட்சிகள்) வெற்றி பெற்றுள்ளது. எனவே நமது நடைமுறையில், முதலாளித்துவ பொருளாதார நடைமுறையோடு நிலப்பிரபுத்துவக் கலர்ச்சார நடைமுறைகளை கடவுள், மதம், மூடக்கருத்துக்களைக் கொண்டு ஏமாற்றுதல் ஆகியவைகளையும் உள்ளடக்கிய நடைமுறைகளையும் சேர்த்துக் கொண்டார்கள். இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளைச் சுரண்டுதல்.

அந்தந்த நாடுகளில் உள்ள, பாட்டாளிவர்க்க சக்திகளின், வீரிய வெளிப்பாடுகள் உள்ள, தலைமைகளையும் கூட ஏகாதிபத்தியத் தலைமை, மறைமுக வினையால் தனக்அடிமை செய்ய உருவாக்கி உள்ள நிலைமைகள் போன்றவைகளை உணராமல் இருக்கமாட்டீர்கள். தனியார்மயம், உலகமயம் இவைகள் அதிக அளவில் பாட்டாளிகளை உருவாக்குவதாகச் சொல்லி பாட்டாளிகளின் எண்ணிக்கைகள் அதிக அளவில் தேவை தானே என கட்டுரையை வடித்து உள்ளீர்கள். உங்களுடைய நோக்கம் நல்ல நோக்கமாகத்தான் தெரிகிறது - நடைமுறைச் செயல் பற்றியதானது. எதிர்த்தரப்பார் நினைவுகளுக்கு அனுசரணையாக மாறும் என்பது மட்டுமல்ல. எதிர்த்தரப்பார், அதாவது, ஏகாதிபத்திய சக்திகள் உங்கள் கணிப்பை இருகரம்

படிப்பகம்

www.padippakam.com



கூப்பி வரவேற்கத் தயார் நிலையிலேயே உள்ளார்கள் என்பதையும் தங்கள் புரிதலில் சேர்த்துக் கொள்ளவும்.

நீங்கள் உலகமயமாக்குதல், தனியார் மயமாக்குதல் பாட்டாளிகளை உற்பத்தி செய்து, நமக்கு அளிக்கும், எதிரிகளின் இயக்க இயல் தன்மை போலச் சொல்கிறீர்கள். ஒரு உதாரணம், முதலாளிகள், நிலக்கிழார்கள், தங்கள் வேலைக்காரர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட பெண்களோடு உறவு வைத்துக் குழந்தை பெற்றுக் கொள்வதை விபச்சாரம் அல்லது அதிகாரத் திமிர் - என்று சொல்ல வேண்டாம். சாதி மற்றும் இனக்கலப்பிற்கான நடைமுறை யுக்தியாகக் கொள்ளலாமென்று சொல்வது போல் உங்கள் கட்டுரையின் சாரம் தொனிக்கிறது. தோழமை நெஞ்சங்கள் காதல் திருமணம் செய்வதைத் தான் ஏற்றுக் கொள்ள முடியும். அதிகாரத் திமிரோடு வைப்பாட்டிகள் வைத்துக் கொள்வதை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்? அது போல் தான் ஏகாதிபத்திய நலனை வரவேற்கும் முதலாளித்துவத்தை - மற்றும் ஏகாதிபத்திய மான்சான்டோ, கம்பெனிகளை எதிர்க்காமல் இருக்க முடியும்.

க.ப.வீ.க்கு எழுதிய மடலில் திரும்ப அழைக்கும் உரிமை கோருதல் தேர்தல் ஆணையத்தை கண்காணிப்பு அதிகாரத்தோடு செயல்பட கோரிக்கை வைக்கலாம். தேர்தல் காலங்களில்-மக்களை, ஒன்றிணைப்பதற்கு நல்ல போர் தந்திரம்.

**செம்மலர் நடராசன்**
அறந்தாங்கி.

## தாராளமயமாக்கலை ஆதரிப்பதா? எதிர்ப்பதா?

***அன்புக்குரிய தோழரே!***

தங்கள் கடிதம் கிடைத்தது. விபரம் அறிந்தோம். தாங்கள் உறவு 8-ம் இதழ் கிடைத்தவுடனேயே படித்து ஆராய்ந்து, விமர்சனம் எழுதி இருப்பது பாராட்டுக்குரியது. தங்களது சமூகபொறுப்புணர்வை காட்டும் நற்பண்புக்கு சான்றாக உள்ளது. நிற்க! விசயத்துக்கு வருவோம்!

தங்கள் கடிதம் சாரமாக தெரிவிப்பது 'உறவு' முன்வைக்கும் தாராளமய மாக்கல் ஆதரவு கண்ணோட்டம் - (பன்னாட்டு முதலாளிகள் - உள்நாட்டு முதலாளிகள்) ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யக்கூடியது. மார்க்சின் பொருள் முதல் வாத கண்ணோட்டமாக இல்லை எனவும் காட்டி உள்ளீர்கள். தாங்கள் தாராளமய மாக்கல் கொள்கையை தவறாக புரிந்து உள்ளீர்கள். எனவே தான் 'உறவு' மீது இத்தகைய குற்றச்சாட்டை முன்வைக்கிறீர்கள். எவ்வாறு தவறானது என விளக்குவது எமது கடமையாகும்.

கார்ல் மார்க்ஸ் 1850-களில் ஐரோப்பாவில் வளர்ந்து நிற்கும் முதலாளித்துவம் உலகெங்கும் தனது சந்தையின் பொருட்டு கால் பதிக்கும்; எங்கெல்லாம் அது தனது ஆளுமையின் கரத்தை நீட்டுகிறதோ அங்கெல்லாம் பிற்போக்கான உற்பத்திமுறைகள் அழியும்; முதலாளித்துவ உற்பத்தி முறையாக மாற்றும். விரைவிலேயே உலகச்சந்தையை நிறுவும். இதன் வெளிப்பாடாகவே அன்று முதலாளி வர்க்கம் முழங்கிய தடையற்ற வாணிப கோரிக்கை என்று கருதினார். இந்த தடையற்ற வாணிபம் சமுதாயத்தில் - உலக அளவில் வர்க்க முரண்பாடுகளை கூர்மைப்படுத்தும். முதலாளித்துவ உற்பத்திமுறையின் நேரடி

படிப்பகம்

www.padippakam.com



விளைவான பாட்டாளி வர்க்கம் தலைமையில் சமுதாய மாற்றம் நிகழும். இந்த அர்த்தத்திலேயே நான் தடையற்ற வாணிபத்தை வரவேற்கிறேன் என்று எழுதினார்; எதிர்பார்த்தார். சில ஆண்டுகளில் தனது கருத்தை மாற்றிக் கொண்டார். காரணம் வரலாறு.

முதலாளித்துவ நாடுகள் - அந்நாடுகளின் முதலாளி வர்க்கங்கள் உலகச் சந்தை நிறுவுவதை தள்ளிப்போட்டன. தமக்கு உத்தர வாதமான சந்தையாக இருக்க காலனிகளை வசப்படுத்துவதில் கவனம் செலுத்தினர். காலனிகளை பிடிப்பதில் கூட முதலாளித்துவ நாடுகளுக்கு இடையே சண்டைகள் (உலக யுத்தங்கள்) எழுந்தன. தங்களது ஆளுமைக்காக ஒவ்வொரு முதலாளித்துவ நாடும் ஜீவ மரண போராட்டம் நடத்தினர்.

காலனி நாடுகளில் ஏகபோக முதலாளிகள் தமது ஆளுமையை செலுத்துவதில் பிரச்சனைகள் எழுந்தன. அதாவது அந்தந்த நாட்டு ஆளும் வர்க்கங்கள் தமது ஆளுமை பறிபோவதைக் கண்டு கொதித்தெழுந்தன. போராடின. ஏகபோக முதலாளித்துவ வர்க்கம் இப்போராட்டங்களையெல்லாம் பலாத்காரத்தின் மூலமே தீர்க்க முடியாது என விரைவிலேயே கண்டனர். (இதற்கு சரியான 2-ம் இந்திய விடுதலைப் போர் 1857) ஆகவே காலனி நாட்டு ஆளும் வர்க்கங்களோடு சமரசம் செய்து கொண்டனர். குறிப்பாக வேறெந்த நாட்டையும் விட இந்தியாவில் தரகு வர்க்கமாக நிலவுடமை வர்க்கத்தை வளர்ப்பதில் வெற்றி பெற்றனர். அதே போல் காலனி நாடுகளில் தனது நலனுக்கு கீழ்ப்பட்ட முதலாளி வர்க்கங்களை (தரகு முதலாளிகள்) உருவாக்கு வதிலும் வெற்றி பெற்றனர். இந்நிகழ்முறை இருபதாம் நூற்றாண்டிலும் நீடித்தது.

ஏகபோக முதலாளித்துவ வர்க்கம் தான் பிறந்த நாட்டில் நிலவுடமை வர்க்கத்தை அழித்துத்தான் தனது ஆளுமையை நிறுவியது. அவ்வர்க்கமே தனது வாழ்நிலையை தக்கவைத்துக் கொள்ள காலனி நாடுகளில் நிலவுடமை வர்க்கத்தோடு சமரசம் செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது. இந்த தந்திரம் கூட திடீரென உதித்தது அல்ல. மாறாக பிரான்ஸ் ஜெர்மன் வரலாற்றிலிருந்து பெற்ற அனுபவமாகும். அதாவது முதலாளி வர்க்கம் நிலவுடமை வர்க்கத்தை அழித்து தனது ஆளுமையை நிறுவும் சூழலில் அல்லது அதற்கு முன்னரே பாட்டாளி வர்க்கமும் அரசியல் அதிகாரத்திற்காக போரடும் வர்க்கமாக முன்வந்தது காரணமாகும். எனவே நிலவுடமை வர்க்கத்தோடு ஏகபோக முதலாளி வர்க்கம் சமரசம் செய்து கொள்ள நேர்ந்தது.,

இவ்வாறு நிலவுடமை வர்க்கத்தை - பிற்போக்கான வர்க்கத்தை முதலாளி வர்க்கமானது அழிக்காமல் போனது முதலாளி வர்க்கமும் பிற்போக்காக மாறிவிட்டது. எனவே பாட்டாளி வர்க்கமே நிலவுடமை வர்க்கத்தை அழிக்க முடியும் என்ற நிலை எழுந்தது. நிலவுடமை வர்க்கத்தை அழிப்பது ஏகபோக முதலாளித்துவ வர்க்கத்தை, தரகு முதலாளித்துவ வர்க்கத்தையும் அழிப்பது தான். அதாவது ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகும்.

முதலாளித்துவ வர்க்கம் பிற்போக்காக போனாலும் முற்போக்கான வர்க்கமாக உதித்தெழுந்துள்ள தேசிய முதலாளி வர்க்கத்தை நமக்கு நேச சக்தியாக அளித்துள்ளது. பாட்டாளி வர்க்கம் தலைமையில் நிலவுடமை வர்க்கம் தரகு முதலாளி வர்க்கம் ஏகபோக முதலாளி வர்க்கத்தை எதிர்த்து சீனாவில் புதிய சனநாயகப் புரட்சி நடத்தப்பட்டதை வரலாற்றில் காண்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



மற்றைய வளர்முக நாடுகளில் இப்புரட்சி நோக்கி செயல்பட்டாலும் புரட்சியை நோக்கி செல்ல முடியவில்லை. பின்தங்கி உள்ளனர்.

இத்தகைய வரலாற்றுச் சூழலில் தான் தாராளமயமாக்கலை பன்னாட்டு முதலாளிகள் முன் வைக்க வளர்முக நாடுகளின் முதலாளி வர்க்கங்களின் ஆதரவோடு செயல்படுத்தப்படுகிறது.

இந்த தாராளமயமாக்கல் கொள்கை செயல்படுத்தப்பட்ட நாடு எதுவாயினும் அந்த நாடுகளின் பின்தங்கிய உற்பத்தி முறைகள் நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளன. குறிப்பாக விவசாயம், கைவினைத் தொழில் சிறுவீதத் தொழில்கள் அழிகின்றன. அந்நாடுகளில் தடையற்ற முதலீடு செய்ய பன்னாட்டு முதலாளிகள் முயல்கின்றனர்.

இதன் காரணமாக அங்கு வளர்ந்துள்ள முதலாளித்துவ உற்பத்தி நிறுவனங்கள்கூட நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளன. ஏன் ஏகபோக முதலாளிகள் (அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ்) கூட (நஷ்டமடைந்துள்ளன) நிறுவனங்கள்கூட நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளன. (விபரத்திற்கு பார்க்க உறவு-6)

ஆனபோதிலும் தாராளமயாக்கலை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக உள்ளனர். இதற்கு வளர்முக நாடுகள் மட்டுமல்லாது ரஷ்ய, சீனா நாடுகளும் உடன்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பன்னாட்டு முதலாளிகள் முன்வைக்கும் தாராளமயமாக்கல் கொள்கை சாராமாக பார்த்தால் உலகில் நிலவுடமை உற்பத்தியை அழிப்பது; உலகில் முதலாளித்துவ உற்பத்தியை கொண்டுவருவது. அரசியல் எல்லைகளை அழிப்பது. ஒரே நாடு, ஒரே தேசம் என்றவாறு ஒரே மாதிரியான சட்ட திட்டங்களை கொண்டு வருவது. இதெல்லாமே உலகில் உலகச் சந்தையை நிறுவுவதை நோக்கி நடைபோடுவதாகும். இதையே "உறவு" உலக முதலாளித்துவ புரட்சி என அழைக்கிறது.

ஏகபோக முதலாளி வர்க்கம் நிலவுடமை வர்க்கத்தை அழிக்காத சூழலில் தான் பிற்போக்கானது என அழைக்க நேர்ந்தது. இன்று அவ்வர்க்கத்தை அழிப்பதை வரவேற்காமல் எப்படி இருக்க முடியும்? எதிரி வர்க்கம் என்பதற்காகவே எதிர்ப்பது சரியா? நம் போன்ற நாட்டு முதலாளித்து கட்சிகள் எதிர்க்கட்சி என்றால் எதையும் எதிர்ப்பது; ஆளும் கட்சியானால் எதையும் சரி என்பது போலவே நமது எதிர்ப்பும் ஆகும். நமது அறிவை-முடிவை முன்னிலைப் படுத்தாமல் தனிப்பட்ட தீவிர வெறுப்பை முன்னிலைப்படுத்துவதாகி விடும்.

ஏகபோக முதலாளி வர்க்கம் நிலவுடமை வர்க்கத்தை அழிப்பது, நமது எதிரியான வர்க்கத்தில் ஒன்று அழிவதாகும்! நமக்கு சாதகமான ஒன்று தானே!

இடதுசாரி இயக்கங்கள் அனைத்துமே தாராளமய மாக்கல் கொள்கை ஆபத்தானது. ஏகாதிபத்தியத்தை வளர்ப்பது என்கின்றனர். இதனால் ஒவ்வொரு நாட்டிற்கும் ஆபத்து! தேசத்திற்கு ஆபத்து! என கூக்குரலிடுகின்றனர்.

நாம் கேட்கிறோம்! இக்கூற்றில் உண்மை இருக்கிறதா? நீங்கள் உண்மையி லேயே மார்க்சின் வர்க்கப் பகுப்பாய்வு முறையை பயன்படுத்தி எடுக்கப்பட்ட முடிவா?

கடந்த கால வரலாற்றிலும் சரி நிகழ்கால வரலாற்றிலும் சரி போராடும் வர்க்கங்கள் தமது நலனை முன்னிலைப்படுத்துவதற்காகத் தான் தேசம், நாடு என்ற கருத்துருவங்களை உருவாக்கின. விளக்கின. அதற்காக போராடின.

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் அவை தேசம், நாடு என்ற கருத்துருவங்களுக்காகவே போராடவில்லை என்பது தெளிவு.

பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கம் ஆகிய இருவர்க்கங்களுக்கு இடையேயான போராட்டங்களில் மட்டும் தான் எந்த கருத்துருவங்களை முன்வைத்தாலும் அது அந்த வர்க்கங்களின் பொருளாதார நலன்களுக்கானது என்று காட்டிக் கொடுத்து விடுகின்றன. ஆகவே தான் மார்க்சியவாதிகள் சாதி, மதம், இனம், மொழி, தேசம், நாடு, சட்ட எதிர்ப்பு, (இறையியல் எதிர்ப்பு, சமயநெறி எதிர்ப்பு), நீதிநெறி, தத்துவ ஞானஎதிர்ப்பு (ஆன்மாவா பருப்பொருளா - நல்லது, கெட்டது) இதில் எது ஒன்றை எடுத்துக் கொண்டு போராடினால் போராடும் வர்க்கத்தின் நலனுக்கானது என்பர். ஏனென்றால் இவை எல்லாமே கருத்துருவங்களே ஆகும். இந்த கருத்துருவங்கள் தனது நலனுக்கு பயன்படாது எனும் சூழலில் மாற்றிக் கொள்ளும். குறிப்பாக இந்தியாவில் தேசியம் பேசிய காந்தி, திராவிட இயக்கங்களை எடுத்துக் கொள்ளுங்கள். இவர்கள் முன்வைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடே அறியும். தாங்கள் முன் வைத்த எதிர்ப்பு ஒவ்வொன்றும் தான் சார்ந்த வர்க்கத்திற்கு - குழுவிற்கு சலுகை பெறுவதையே நோக்கமாக கொண்டது.

ஏன் பா.ஜ.க. முன் வைத்த மதவாதம்-இராமர் கோவில் பிரச்னையை எடுத்துக் கொள்ளுங்கள். ஏன் பா.ஜ.க. மதவாதத்தை, இராமர் கோவில் கட்டுவதை தள்ளிப் போட்டன. ஆட்சியதிகாரத்தில் தொடர இவை பயன்படாது என்பதால் தான்!

ஏகபோக முதலாளித்துவ வர்க்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும், நாடு, தேசம் என்ற தனி எல்லைகளை இல்லாமல் செய்கின்றன. வேறுவிதமாகச் சொன்னால், ஏகபோக முதலாளி வர்க்கமும் சரி, தரகு முதலாளி வர்க்கமும் சரி நாடு, தேசம் என்ற கருத்துருவங்கள் அதன் நலனுக்கு பயன்படாது என்றே உணர்ந்துள்ளன. அப்படியே பயன்படுத்தினாலும் தனது சுயநலனுக்கானது என்பதை தெரிந்தே பயன்படுத்துகின்றனர்.

முதலாளித்துவ வர்க்கங்களே தேசம், நாடு என்ற கருத்துருவங்களை கைவிட்டுள்ள சூழலில் பாட்டாளிவர்க்க முன்னணியினரான பொதுவுடமை வாதிகள் கையில் எடுத்துக் கொள்வது எங்ஙனம் சரியாகும்? தாராளமயமாக்கல் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் எம்மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற தொலைநோக்கு பார்வையில்லை. (தாராளமயமாக்கல் 'உலகமயமாக்கல்', 'தனியார்மயமாக்கல்' இவை நமது எதிர்ப்பையும் மீறி நடைமுறைப்படுத்தப் படுகிறது; அதன் விளைவுகளும் நாம் எதிர் கொள்ள வேண்டியதாகிறது. நம்து கண்ணோட்டம் தாராளமய ......நடப்பில் எதிர்ப்பது மட்டுமல்லாமல் எதிர்கால விளைவுகளை எதிர்த்து போராட வேண்டும் சி.பி.ஐ. சி.பி.ஐஎம். எம்.எல் குழுக்களும் சரி எதிர்கால விளைவுகளை எதிர்க்க எந்த திட்டமிடாமல் எதிர்ப்பை காட்டுகின்றன) இது வர்க்கப் பார்வையை வளர்ப்பதை மறுப்பதாகிவிடும். வரலாற்றை எந்திர கதியில் பார்ப்பதாகிவிடும்.

தாராளமயமாக்கல் கொள்கையை வர்க்க கண்ணோட்டத்தில் - (இங்கு மேலோட்டமான பொருளில் பயன்படுத்தவில்லை; மாறாக ஆழ்ந்த பொருளில் பயன்படுத்துகிறோம்.) பார்க்க மறுப்பது; நாடு தேசம் என்ற கருத்துருவங்களை முன்நிறுத்தி தனது நலனுக்காக போராடும் - தனக்கு கீழ்பட்ட வர்க்கங்களை ஏமாற்றும் - முதலாளித்துவ வர்க்க கண்ணோட்டமே ஆகும். சுருக்கமாகச் சொன்னால் நாம் எதிர்காலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். தாங்கள்

படிப்பகம்

www.padippakam.com



நிகழ்காலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறீர்கள். ஆகவே தான் உங்களது முடிவு 'உறவு'க்கு எதிராக அமைகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் திசைவழி வகுப்பது எப்போதுமே நிகழ்காலத்திலிருந்து வகுப்பது இல்லை. மாறாக எதிர் காலத்தை முன்னிட்டு வகுப்பதாகும்.

பாட்டாளி வர்க்கம் அல்லாத அனைத்து வர்க்கங்களும் (உடைமை வர்க்கங்கள்) கடந்த காலத்திலிருந்து நிகழ்கால வாழ்விற்காக (உடைமைக்கும் உயிருக்கும்) ஆக போராடுகின்றன. ஆனால் பாட்டாளி வர்க்கம் இயல்பிலேயே உடைமையற்ற வர்க்கம் ஆகும். அதற்கு நிகழ்கால வாழ்வில் இழப்பதற்கு எதுவும் இல்லை; உடனடியாக பெறும் வகையிலும் எதுவும் இல்லை. எனவே எதிர்கால நலன்களை ஒட்டியே நிகழ்கால வாழ்விற்கு போராடுவதாக உள்ளது.

எனவே தான் நாம் சொல்கிறோம். எதிர்கால நலன்களை கணக்கில் கொண்டு -அதாவது பாட்டாளி வர்க்கமயமாதல். தேசம், நாடு என்ற எல்லைகள் அழிதல், பிற்பட்ட உற்பத்தி முறைகள் அழிதல்... என்றவாறு தாராளமய மாக்கலை ஆதரிக்கிறோம்.

மேலும் தாராளமயமாக்கல் கொள்கை நடைமுறையை உங்களால் இன்று தடுத்து நிறுத்தமுடியுமா? முடியாது என்றால் - உங்களது எதிர்ப்பை மீறி அது வெற்றி பெறும் எனில் உங்களது திட்டம் என்ன? செயல்பாடு எப்படி இருக்கும்?

இன்று உங்களது எதிர்ப்பு எத்தகையது? உள்நாட்டு தரகு முதலாளி வர்க்கத்தை இணைத்துக் கொள்வீர்களா? தரகு முதலாளி வர்க்கத்தையும் பன்னாட்டு முதலாளி வர்க்கத்தையும் பிரிக்கமுடியாது ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல என்று நீங்கள் தானே கடந்த காலத்தில் சொன்னீர்கள். அதை நீங்கள் (பொதுவுடமை இயக்கங்கள்) சுயவிமர்சனத்தோடு மாற்றிக் கொண்டுள்ளீர்களா?

இதெல்லாம் கணக்கில் கொண்டு பார்த்தால் உங்களது தாராளமயமாக்கல் எதிர்ப்பு மறைமுகமாக தரகு முதலாளிகளை ஆதரிப்பதாகவே முடியும். இதற்கு சரியான உதாரணம். அமெரிக்காவின் சியாட்டில் மாநகரில் உலக வர்த்தக அமைப்பின் மாநாடு நடைபெற்றது. அதில் முரசொலி மாறன் சுற்றுப்புறச்சூழல், குழந்தை தொழிலாளர் உழைப்புச் சுரண்டல், தொழிலாளர் பராமரிப்பு போன்றவற்றில் உள்ள குறைபாடு காரணமாக உலக வர்த்தகத்தில் வளர்முக நாடுகள் ஒதுக்கி வைப்பது சரியல்ல. வளர்ச்சி அடைந்த நாடுகள் தங்களது சுயநலனுக்காக இம்மாதிரியான குறைபாடுகளை முன்வைக்கின்றன என்று எடுத்துக்காட்டினார். தனது கோரிக்கையில் வளர்முக நாடுகள் உதவியோடு வெற்றியும் பெற்றார்.

தாராளமயமாக்கலை முறியடிப்பது என்ற தங்களது கண்ணோட்டம் - முரசொலி மாறன் போன்ற முதலாளித்துவ வர்க்க வண்ணோட்டத்திலிருந்து எப்படி மாறுபடுகிறது. விளக்கம் தேவை.

என்னுடைய கருத்தில் உடனடியாகவோ ஒன்றிரண்டு ஆண்டுகளிலோ கூட தாராளமயமாக்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தும் முதலாளி வர்க்கத்தை ஒழித்து விடமுடியாது. அதற்கு நீண்ட தயாரிப்பு தேவைப்படுகிறது. ஏனென்றால் நம்மிடம் போதுமான வர்க்க சக்திகள் இல்லை; இந்த வர்க்க

படிப்பகம்

www.padippakam.com



சக்திகளின் பிரதிநிதியான பொதுவுடமைவாதிகள் மத்தியில் கூட ஒற்றுமை இல்லை. ஒவ்வொருவரும் தத்தமது அமைப்பே சரி என ஒருவருக்கொருவர் தொடர்பு இன்றி, கருத்துப் பரிமாற்றமின்றி - தற்போதுள்ள தமது சக்திகளின் துணையோடு செயலுக்கு இறங்குகின்றனர். இது எதைக் காட்டுகிறது? இந்த அமைப்புக்களின் சிந்தனை, செயலில், உடைமை வர்க்கப் பின்னணி உள்ளது. அதை போக்காத வரை முற்போக்கு வர்க்கமான பாட்டாளி வர்க்க சிந்தனை, செயலுக்கு தங்களை உயர்த்திக் கொள்ளாத வரை பன்னாட்டு முதலாளி வர்க்கத்தை எதிர் கொள்ள முடியாது போராடி வெற்றி பெற முடியாது.

மேலும் தாராளமயமாக்கல் கொள்கையை கொண்டு வரும் பன்னாட்டு முதலாளி வர்க்கத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காக நிலவுடமை வர்க்கத்தை ஆதரிக்க முடியாது. ஆனால் தரகு முதலாளி வர்க்கத்தை விட பிற்போக்கான வர்க்கமான நிலவுடமை (உற்பத்தியை) வர்க்கத்தை அழிப்பதை முன் நின்று செய்யும் முதலாளி வர்க்கத்தை ஆதரிப்பது ஒன்றும் தவறானது அல்ல; வரலாற்றில் நடக்காத பிற்போக்கான செயலும் அல்ல. எந்தஒரு விசயத்திலும் நிபந்தனையில்லாமல் ஆதரிப்பது எதிர்ப்பது தவறாகவே முடியும். ஆகவேதான் தாராளமயமாக்கல் கொள்கையை நிலவுடமை உற்பத்தியை - வர்க்கத்தை அழிப்பதால் வரவேற்கலாம். வரவேற்க வேண்டும் என்கிறோம்.

முதலாளித்துவ வர்க்கம் நிலவுடமை உற்பத்தியை அழிக்கிறது என்றால் மதம், கடவுள், மூடநம்பிக்கைகளை எதிர்க்கவில்லை ஊட்டி வளர்க்கிறதே எனக் கேட்ககூடும். நாம் கேட்கிறோம். பிரெஞ்சுப் புரட்சிக்கு பின்னால் மற்றைய முதலாளித்துவ நாடுகளின் புரட்சியில் மதம் மூடநம்பிக்கை எதிர்ப்பு முக்கியப் பங்கு வகித்ததா என்றால் இல்லை.

இதற்கான காரணத்தை எங்கெல்ஸ் டூரிங்குக்கு மறுப்பு எனும் நூலின் இரு அத்தியாயங்களை கற்பனா வாத சோசலிசம், விஞ்ஞான சோசலிசம் எனும் பெயரில் சிறு நூலாக வெளியிடும் போது - அதுவும் ஆங்கிலப் பதிப்புக்கான முன்னுரையில் கடைசிப்பகுதியில் விவரிக்கிறார். சாரமாவது, பிரெஞ்சுப் புரட்சி முதலாளி வர்க்கத்திற்கு அரிய படிப்பினைகளை வழங்கியது. நிலவுடமை வர்க்கத்தை எதிர்த்து போராடுவதற்காக முதலாளி வர்க்கம் பாட்டாளி வர்க்கத்திற்கு பொதுக்கல்வி அளித்தது. அக்கல்வி பெற்ற பாட்டாளி வர்க்கம் விரைவிலேயே முதலாளி வர்க்கத்தை எளிதில் எதிர்த்தது. சந்தித்த ஆண்டு 1871 இதுவே வரலாற்றில் பாரீஸ் கம்யூன் எனப்படுகிறது.

ஆகவே தான் முதலாளி வர்க்கம் மூடநம்பிக்கை, கடவுள், மதம் எதிர்ப்பு போன்றவற்றை கைவிட்டது. பாரீஸ் கம்யூனுக்கு பின் பிரான்சு முதலாளி வர்க்கம்கூட கடவுள் நம்பிக்கை-போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. அது ஒன்று தான் பாட்டாளி வர்க்கத்தை அடக்கி வைப்பதற்கான தார்மீகமான சாதனமாக பார்த்தது. விபரம் வேண்டுவோர் மேற்படி நூல் படிக்க வேண்டுகிறோம்.

அதே நேரத்தில் இந்து மதம், முஸ்லீம் மதம் போன்றவை முதலாளி வர்க்க நலனுக்கு ஏற்றவகையில் மாற்றுவதாகவே இன்றைய நடைமுறைகளை காணலாம் உ.ம். கிராமப்புறங்களில் ஒவ்வொரு சாதியும் இன்ன முறைப்படிதான் கோவிலில் வழிபடலாம் என்று உள்ளது. அதே நேரத்தில் பழனி, சபரி கோவில் சாதி வேற்றுமையை மறக்கச் செய்கிறது. அதேபோல் மாரியம்மன் கோவில் புரவி எடுப்பு பால்குடம் எடுப்பு என மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று வருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



சாதி பார்க்கும் சங்கராச்சாரிக்கு எதிராக பங்காரு அடிகளார் செய்கைகள் எல்லாம் நிலவுடமைக்கும் முதலாளித்துவத்துக்கும இடையிலான வேறுபாடுகளே! எனவே முதலாளி வர்க்கம் சாதி, மதம், கடவுள் மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் என்பது நமது கற்பனாவதமான விருப்பமே என அறிக! மேலும் விபரங்களுக்கு தங்கள் கடிதம் எதிர்பார்க்கிறோம்.

தோழமையுடன்
**"உறவு"**

**மதுரை, 8-12-99**

***அன்புள்ள தோழர் பாலா அவர்களுக்கு,***

வணக்கம். 'உறவு' திறனாய்வு நிகழ்ச்சியில் இறுதியில் தாங்கள் ஆற்றிய உரை, அங்கு கூடியிருந்த தோழர்களின் கேள்விகளுக்கு நேரடியான பதிலாக அமையவில்லை. மாறாக, "100 முறை படித்தேன் 150 முறை படித்தேன்" என்ற தற்பெருமையாகவே அமைந்திருந்தது. மேலும் அங்குள்ள தோழர்களுக்கு எதுமே தெரியாது என்று நினைத்துக் கொண்டு 'அதைப் படிச்சுப் பாருங்கள்', 'இதைப் படிச்சுப் பாருங்க' என்று தாங்கள் கூறியது நெருடலாக இருந்தது.

'மெய்யறிவின் வறுமை' போன்ற நூல்கள் விமர்சனமாக எழுதப்பட்டது தான். ஆனால் மார்க்சிய மூலவர்கள் ஒரு தத்துவம் படைத்தார்கள். அத்தத்துவத்திற்கு எதிரான கருத்தை அவர்கள் விமர்சித்தார்களே ஒழிய, விமர்சனத்தையே தத்துவமாக ஏற்றுக் கொள்ளவில்லை. இனிவரும், இதழ்களில், தங்களது கருத்துக்களை முன்வைத்த கட்டுரைகளை எதிர்பார்க்கிறேன். அதற்கு நீங்கள் டிராட்ஸ்கியின் மேற்கோள்களைக் கூட உபயோகிக்கலாம். சந்திப்போம்! நன்றி!

தோழமையுடன்
**எஸ். சீனிவாசன்**

## உறவு'ன் பார்வை டிராட்ஸ்கிய வாதமா?

***அன்பினிய தோழரே!***

தங்கள் கடிதம் கிடைத்தது. விபரம் அறிந்தோம். தங்கள் கடிதம் தெரிவிப்பது: தாங்கள் ஏற்றுக் கொண்ட (சி.பி.ஐ.எம்.எல் லிபரேசன்) அரசியல் புரிதலிருந்து எழுதியதாகவும் ஒருபுறம் தெரிகிறது. மறுபுறம் அதற்கே முரணாக மாறுபட்ட கண்ணோட்டம் கொண்டதாகவும் புரிந்து கொள்ள முடிகிறது.

(1) எமது உரை வாசகர் சந்திப்பில் தோழர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலாக அமையவில்லை என்று குறிப்பிட்டு உள்ளீர்கள். எந்தக் கேள்வி, யாருடைய கேள்வி என தெளிவுபடுத்தி இருந்தால் நலம். தோழர்களே! எமது உரையில் உங்களது கேள்விக்கு பதிலாக அமையவில்லையென்றால் எழுதவும். உறவில் முயற்சி செய்கிறேன். விவாதத்தை முன்எடுத்துச் செல்வோம் என்று கூறியதை தாங்கள் மறந்து விட்டீர்களா?

(2) நாம் கடந்த உறவு இதழ்களில் புதிய அரசியல் சித்தாந்தக் கண்ணோட்டத்தை முன் வைத்துள்ளோம். அத்தகைய கண்ணோட்டத்தையே நாம் மார்க்சிய கண்ணோட்டம் என்கிறோம். அதற்கு மாறுபட்ட அரசியல்

படிப்பகம்

www.padippakam.com



சித்தாந்த கண்ணோட்டங்களை தவறானது: மார்க்சிய கண்ணோட்டத்திலிருந்து திசைவிலகுவது தான் என்றும் வெளிப்படையாகவே முன் வைக்கிறோம்.

அத்தகைய கண்ணோட்டமே இன்றைய சூழலுக்கு சரியானது; அத்தகைய கண்ணோட்டம் மார்க்சிய மூலவர்களின் படைப்பான கம்யூனிஸ்ட்கட்சி அறிக்கை. டூரிங்குக்கு மறுப்பு. லுத்விக்ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள செர்மன் தத்துவஞானம் என்ற நூல்களை திரும்பத் திரும்பத் படித்து ஆராய்ந்ததன் விளைவு என்றும் குறிப்பிட்டேன். தாங்கள உறவு முன் வைக்கும் கண்ணோட்டம் தவறானது எனக்கருதினால் - எழுதித் தந்தால் வெளியிட தயராக இருக்கிறோம்.

மேலும் மேலே காட்டிய மூலவர்களின் படைப்பை நாம் ஒருமுறை படித்து புரிந்த கொள்ள முடியும் எனக் கருதவில்லை. குறிப்பாக லெனினே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை நூற்றுக்கு மேற்பட்ட தடவை படித்துள்ளேன். படிக்கின்ற ஒவ்வொருமுறையும். புதிய புதிய கருத்துக்களை பெறுவதாக கூறுகிறார். மாமேதை லெனினே நூறு தடவை படித்துள்ளார் என்றால். நாம் (நான்) அதைவிட ஆயிரம் தடவை படித்தாலும் அவருக்கு ஈடாக - ஒப்பாக புரிந்து கொண்டேன் எனக் கருதமாட்டேன். இந்தக் கண்ணோட்டத்தில் தான் அன்று எமது உரை இருந்தது. நாம் 100 தடவை, 150 தடவை படித்தேன் என்பதை தற்பெருமையாகவோ. தன்னகங்காரத்தோடோ குறிப்பிடவில்லை. மாறாக நாம் முன்வைக்கும் கண்ணோட்டம் எவ்வாறு சரியானது என்பதை மற்றவர்களும் புரிந்து கொள்வதற்கான அடிப்படையாகவே முன்வைத்தோம்.

(3) "விமர்சனத்தையே தத்துவமாக" உறவு மேற்கொள்கிறது என குறையாக சொல்கிறீர்கள். தோழரே! மார்க்சியத்தத்துவம் என்பதே - முதலாளித்துவ சமுதாயம் பற்றிய விமர்சனம் மற்றும் புரட்சிகரமான நடைமுறையை முன் நிறுத்துவது தான். இதுகுறித்து ஆசான்கள் பலரும் கூறி உள்ளனர். இதை கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

(4) தங்களது கடிதம் சாரம்மாக தெரிவிப்பது யார் சொன்னார்கள்? என்ன சொன்னார்கள் என்ற கேள்வி அடிப்படையிலேயே உள்ளது. இத்தகைய கண்ணோட்டம் மார்க்சுக்கு முந்தைய பொருள் முதல் வாதத்தை கொண்டதாகும். ஏனெனில். மார்கிஸப் பொருள் முதல் வாதமோ இந்தக் கேள்விகளுக்கும் மேலாக. சமுதாயச் சூழலை கணக்கில் கொள்கிறது. ஆகவே யார் சொன்னார்கள்? என்ன சொன்னார்கள்? சொல்லும் நபர் அந்தக் கருத்தைச் சொல்ல வேண்டிய சமுதாய அவசியம் என்ன என்று பார்க்க வேண்டும். தாங்கள் எமது பதிலை கண்ணோட்டத்தை சூழலை விலக்கி பொருள் கொள்வதாக கருதமுடிகிறது. எனவே தான் 'உறவு'க்கு மாறுபட்ட கண்ணோட்டம் கொண்டதாக தங்கள் கருத்துக்கள் அமைகிறது.

(5) தங்களது விமர்சனங்களுக்கும் மேலாக தாங்கள் சொல்வது. "இனிவரும் இதழ்களில் தங்களது ............... டிராட்ஸ்கியின் மேற்கோள்களைக் கூட ........................... காட்டலாம் என்கிறீர்கள்.

இதன் மூலம் தாங்கள் உறவு முன்வைக்கும் கண்ணோட்டம் புரிந்து கொண்டவர் என்றாகிறது. அதே நேரத்தில் தோழரே! தங்களுக்கு தெளிவுபடுத்துகிறேன். டிராட்ஸ்கியின் நூல்களை நாம் படித்ததில்லை; அவரைப்பற்றி மற்றவர்கள் சொல்வதிலிருந்து தான் அறிவேன்! அவர் முன்வைத்த புரட்சிக்கான திசைவழி அன்று சரியானதல்ல; ஆனால் இன்று ஏற்புடையது

படிப்பகம்

www.padippakam.com



என்று கருதுகிறேன். ஆனால் அதுவும் அவரது நூல்களிலிருந்து அல்ல; மாறாக மூலவர்கள் காட்டிய வழி முறையிலிருந்து தான்....

(6) தோழரே! தங்களது கடிதம் உறவின் மீதான விமர்சனங்களை மீறி சரியான கண்ணோட்டம் தான் எனக் கருதுவதும் தெரிகிறது. அப்படியாயின் உறவுக்கு மாறுபட்ட - ஏன் தான் புதிதாக ஏற்றுக் கொண்ட கண்ணோட்டத்திற்கு மாறான அரசியல் சித்தாந்த நிறுவனத்தில் ஏன் பணியாற்றுகிறீர்கள்? தங்களது கண்ணோட்டம் "கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை" என்ற பழமொழியை நினைவுபடுத்துகிறது.

அன்பு தோழரே! நாம் முன்வைக்கும் கருத்துக்கள் விவாதத்தை முன் எடுப்பதற்காகவே! மாறுபட்ட கருத்து இருப்பின் விவாதம் தொடரட்டும்.....

தோழமையுடன்.....

ஆர்.

சென்னை, 20-2-99

தோழர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு தி. சிலப்பதிகாரம் எழுதுவது. தாங்கள் அனுப்பிவைத்த 'உறவு' இதழ்-6 படித்தேன். கருத்தியல் போராட்டம் நடத்துவதற்கு 'உறவு' ஒரு களமாக திகழ்கிறதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சமூகத்தில் போலியான உறவுகளை வெட்டிவீழ்த்தி சரியான கருத்தியல் உறவுகளை நிலை நாட்டுவதற்கு தங்கள் 'உறவு இதழ்' ஒரு சரியான சாதனமாக, கருவியாக திகழ்கிறது.

இந்த இதழ் பக்கம் எண் : 32-ல் குறிப்பிட்டவையான "தரகு முதலாளிகளின் சமீபத்திய வருமான குறைவை" (தினமணி, 9-4-98) ஆதாரத்திலிருந்து எனக்கு உணர்த்தியுள்ளீர்கள். இது என்னுடைய பழைய தவறான நிலைபாடுகளை திருத்திக்கொள்ள துணை புரிகிறது. மிக்க மகிழ்ச்சி, ஏற்றுக் கொள்கிறேன். ப. எண் : 28-ல், தோழர். பறம்பை அறிவன் அவர்களுக்கு பதில் கூறும் கட்டுரையில் "நாம் திறனாய்வோடு கூடிய நடைமுறைத் தீர்வையே முன் வைக்கிறோம். தத்துவத்தையும், நடைமுறையையும். தனித்தனியாக பிரித்து பார்க்கவில்லை." என்று கூறியிருப்பது மிகவும் ஏற்புடையது. இது சில எழுத்தாளர்கள், அறிஞர்கள், முற்போக்காளர்கள், புரட்சியாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு தக்க அறிவுரையாக அமைந்திருக்கிறது. தோழர். சண்முகநாதன் அவர்களுக்கு தாங்கள் பதில் கூறும் கட்டுரையில் ப.எண்: 11-ல் "மா.லெ. இயக்கமானது ஒட்டு மொத்தமாக வர்க்க உணர்வுகளிலிருந்து படிப்படியாக மாறியதன் ஒட்டுமொத்த வெளிப்பாடுதான் அ. மார்க்ஸ் கண்ணோட்டம் என ஏன் கருதக் கூடாது" என கேட்பது சரியானதுதான், அதுதான் உண்மை, அவரைப்போன்று எத்தனையோ ஆயிரக்கணக்கான தோழர்களை இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே கட்டுரையில்.

ப.எண்: 8-ல் "ஒன்றுபட்ட கட்சியை உருவாக்குவதற்கான முயற்சியை முதன்மையான பணியாக எந்த மா.லெக் குழுவாவது கொண்டுள்ளதா? இல்லையே!" என்று கூறியிருப்பது சரியல்ல, எத்தனையோ தவறான நிலைபாடுகளை சரிசெய்து கொண்டு வருங்காலங்களில் ஒரே கம்யூனிஸ கட்சியை கட்டியெழுப்புவதற்கான முதற்பணியாக CPI (ML) ரெட்ஃபிளாக்கின் கடும் முயற்சியில் இந்தியாவில் 6 மா.லெ இயக்கங்களை ஒன்றிணைத்து ஒரு கூட்டமைப்பாக அமைத்து இந்திய அளவில் பல்வேறு போராட்டங்களையும்,

படிப்பகம்

www.padippakam.com



நிகழ்ச்சிகளையும் இந்த கூட்டமைப்பின் சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. அதே பக்கத்தில் "வெகுஜன வேலைகளில் கவனம் குவித்துக் கொண்டே புரட்சிகர கட்சியை கட்ட இயலாது" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அதுவும் சரியல்ல. ஒரு புரட்சிகர கட்சி என்பத பல்வேறுபட்ட வர்க்க-வெகுஜன பிரிவுகள், கருத்தியல்-தத்துவயியல பிரிவுகள். அரசியல்-பொருளியல் பிரிவுகள். ஆயுத-இராணுவயியல் பிரிவுகள், வெளிப்படையான - தலைமறைவான பிரிவுகள். சட்டத்திற்கு உட்பட்ட - சட்ட விரோதமான பிரிவுகள், அலுவல் சார்ந்த - அலுவல்சாரா பிரிவுகள் இப்படி பல்வேறு பிரிவுகளை உள்படுத்திக்கொண்டு, சமூகத்திலுள்ள வர்க்க பேராட்டங்களை ஸ்தாபனயியல் படுத்திக்கொண்டு. வர்க்கப் போராட்டத்தை வேகப்படுத்துவதுதான் ஒரு புரட்சிகர கட்சி செய்ய வேண்டிய பணிகள். இவற்றை ஏதேனும் ஒன்றை நிராகரித்துக் கொண்டாலும் ஒரு புரட்சிகர கட்சியாக தொடர்ந்து இருக்க முடியாது. இப்படிப்பட்ட வலைப்பின்னல் மூலமாக மட்டும்தான் அனைத்து புரட்சிகர சக்திகள். இயக்கங்களை ஒன்றுபடுத்தி வளர்த்துக் கொண்டு வர முடியும். இவற்றை மறுத்து ஒதுங்கி இருந்து வருவது என்பது குறுங்குழுவாதமே ஒழிய. புரட்சிகர தன்மையானதல்ல.

ப. எண் : 15-ல் ரஷ்ய. சீனாவல் "நிறுவனங்களை மேற்பார்வை செய்வோர் பொதுச்சொத்தை தமது சொத்தாக பதவியில் இருக்கும்வரை அனுபவித்தனர்; இவர்களைத்தான் கட்சியிலும் - அரசியலும் தோன்றிய அதிகார வர்க்கத்தினர் என்கிறோம். இந்த அதிகார வர்க்கத்தினருடன் கூடவே சலுகை பெற்ற தொழிலாளி வர்க்கத்தினர் தோன்றினார்" என்று தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் இப்படிப்பட்ட போக்குகள் ரஷ்யாவில், சீனாவில் எந்த காலகட்டத்தில் தோன்றியது என்று தாங்கள் குறிப்பிடவில்லை. ஆனால் அப்படி தோன்றியது உண்மைதான். எப்பொழுது என்றால் 1953-க்கு பிறகு ரஷ்யாவிலும். 1976-க்கு பிறகு சீனாவிலும் ஆகும். அதற்கு முன்பாக அப்படி தோன்றவில்லை.. 1950 களில் குருஷ்சேவ் மற்றும் டிட்டோ தலைமையில் ரஷ்யாவில் திரிபுவாத சித்தாந்தங்கள் அரங்கேறிய பிறகும். 1970-களில் டெங்சியோபிங் மற்றும் ஹுவாகுவாபெங் தலைமையில் சீனாவில் திரிபுவாத சித்தாந்தங்கள் அரங்கேறிய பிறகும் தாங்கள் மேலே கூறியிருப்பது தோன்றியது.

ப.எண் : 23-ல் "அரசுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் கடிதத்தில் குறிப்பிட்டபடி தனியார் தொழிலகத்தில் வேலை செய்வதைவிட அதிக உரிமை சுதந்திரம் பெற்றவர்கள். இந்த தொழிலாளர்களின் பிரதிநிதிகள் தான் சி.பி.ஐ. சி.பி.ஐ.எம் கட்சியினர். இக்கட்சி புரட்சிகர குணாம்சம் இல்லாததற்கு இவ்வர்க்கத்தின் நலனை முன்னிலலப்படுத்துவது தான். ஏனென்றால் இவ்வர்க்கம் லெனின் வார்த்தைகளில் சொன்னால் புரட்சிகரமற்ற வர்க்கமாகும்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள்.

தோழர். லெனின் 'ஏகாதிபத்தியம் - முதலாளித்துவத்தின் உச்சகட்டம்' (நூல் திரட்டு - இரண்டாம் பாகம்) ப. எண் : 167-ல் "மிகச் சொற்பமான சில பணக்கார நாடுகளுக்கு உயர்ந்த ஏகபோக லாபங்கள் கிடைப்பதையும் குறிப்பதாகிய ஏகாதிபத்தியமானது. பாட்டாளி வர்க்கத்தின் மேல் மட்டத்துப் படிவத்தினருக்கு லஞ்சங் கொடுத்துச் சரிக்கட்டுவதைப் பொருளாதார வழியில் சாத்தியமான தாக்குகிறது" என்று குறிப்பிடுகிறார் இதற்கு அவர் விளக்கம் அளிப்பது எவ்வாறு என்றால் முதலாளித்துவம். ஏகாதிபத்தியமாக பரிணமித்த பொழுதுதான் காலனி நாடுகளான ஆசிய. ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளுக்கு ஏகாதிபத்தியம்

படிப்பகம்

www.padippakam.com



தன் மூலனத்தை ஏற்றுமதி (அதே நூல்.ப.எண் : 97, 98) செய்து தொழிற்சாலைகளை ஆரம்பித்தது. இதன் விளைவாக நேரடி உற்பத்தி சார்ந்த தொழிற்சாலைகள் பெரும்பான்மையானவைகள் காலனி நாடுகளுக்கு மாற்றப்பட்டது. ஏகாதிபத்திய நாட்டில் அதுவரை நேரடி உற்பத்தியில் ஈடுபட்டுவந்த கணிசமான தொழிலாளர்களை நேரடி உற்பத்தி சாரா அலுவலர்களாக அல்லது பாட்டாளி வர்க்கம் அல்லாத அல்லது பாட்டாளி வர்க்கத்திற்குள் பிரபுக்குல வர்க்கமாக மாற்றப்பட்டது. (அதே நூல் ப. எண் : 63) இவர்களைத்தான் தோழர். லெனின் 'பாட்டாளி வர்க்கத்தின் மேல் மட்டத்துப் படிவம்' என்று குறிப்பிடுகிறார்.

அதைப்போன்று இந்தியாவில் அரசுத்துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி, நேரடி உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள், நேரடி உற்பத்தியில் ஈடுபடாத அலுவலர்கள் அல்லது தொழிலாளர்கள் உள்ளனர். மார்க்ஸியம் சமூகத்தில் உள்ள வர்க்கங்களிலேயே புரட்சிகர வர்க்கம் என்று கூறுவது 'நேரடியாக ஆலையில், பொருள் உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களை' தான். இந்த வர்க்கம் உலகத்தில் எந்த பகுதியில் இருந்தாலும் அதுதான் 'கம்யூனிஸ கட்சி' பிரதிநிதித்துவப் படுத்தப்படுகிற புரட்சிகர வர்க்கம். அவர்கள் அரசு தொழிற்சாலைகளில் வேலை செய்வதால் சீரழிந்த வர்க்கமாக மாட்டார்கள்.

CPI, CPI (M) திரிபுவாதிகளாக சீரிழிந்ததற்கான காரணம், நேரடி உற்பத்தியில் ஈடுபடாத அலுவலர்களை, தொழிலாளர்களை அல்லது நேரடி உற்பத்தியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் படுத்துவதாலோ, படுத்தாமல் இருப்பதாலோ அல்ல. மாறாக அவர்கள் இரண்டாம் உலக போருக்கு பிறகு ஏகாதிபத்தியத்தின் 'நவகாலனிய' கட்டத்தை மதிப்பிடுவதிலும், இந்திய அரசைப்பற்றி மதிப்பிடுவதிலும், இந்திய ஆளும் வர்க்கங்களை மதிப்பிடுவதிலும், செய்த தவறுகள்தான் அவர்களை சீரழித்தது. இந்த மதிப்பிடுதல்களில் தவறிழைக்கும் சில மா.லெ குழுக்களையும் கூட சீரழிக்கிறது.

கம்யூனிஸ்டுகள் எப்பொழுதும் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியத்தை உயர்த்திப்பிடிப்பவர்கள் அதில்தான் அவர்களுக்கு சர்வதேசிய பலம் இருக்கிறது. ஏகாதிபத்தியமும் எப்பொழுதும் ஏகாதிபத்திய சர்வதேசியத்தை உயர்த்திப் பிடிக்கிறது. அதன் வெளிப்பாடுதான், தாராளமயம், உலகமயம், ப.எண்: 24-ல் தாங்கள் கூறியிருப்பது போல "சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு" தாராளமயம், தனியார்மயம், உலகமயம் எந்த வகையிலும் துணைபுரியாது மாறாக ஏகாதிபத்திய சர்வதேசியத்திற்குதான் பலம் சேர்க்கிறது. அது 'சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு' மிகவும் தீங்கு செய்வதாகும். அதே பக்கத்தில் : "இழப்பதற்கொன்றுமில்லாத பாட்டாளி வர்க்கம்" என்று மார்க்ஸியம் கூறுவது என்பது பாட்டாளி வர்க்கம் 'இழப்பதற்கு உற்பத்தி சாதனம் (உற்பத்தி கருவி) இல்லாமையைத்தான்' சொல்லியிருக்கிறதே தவிர பாட்டாளி வர்க்கம் நல்ல உணவு - உடையை இழக்க வேண்டும் என்றோ நல்ல குடியிருப்புகளை அல்லது நவீன விஞ்ஞான சாதனங்களை இழக்க வேண்டும் என்றோ சொல்லப்படவில்லை.

நம் தோழமை கருத்துபரிமாற்றம் மேலும் சிறப்புற

தொடர வேண்டும் என்று

**தோழமையுடன்**

**தி. சிலப்பதிகாரம்**

படிப்பகம்

www.padippakam.com



## தனியார்மயம் - சில திறனாய்வுக் குறிப்புக்கள்

*அன்பிற்குரிய தோழரே!*

தங்கள் கடிதம் கிடைத்தது. விபரம் அறிந்தோம். உடன் பதில் எழுத முடியவில்லை. காலதமெதத்திற்கு மன்னிக்கவும். நிற்க! விசயத்திற்கு வருவோம்.

(1) ஒன்றுபட்ட கட்சியை கட்டும் பணியையும், வெகுசன அமைப்புக்களை கட்டிக் கொண்டே... என்றும் செயல்படுவதாக 'செங்கொடியை' தாங்கள் சார்ந்த அமைப்பை காட்டுகிறீர்கள். தத்துவார்த்த அரசியில் பிரச்னைகளை தீர்க்கமால் வெகுசன அமைப்பைக் கட்டுவது செயல்படுவது நமது உழைப்பை வீணாக்கிவிடும். "உழுகிற காலத்தில் உழ வேண்டும்" என்றபடி செய்யாமல் நமது சக்திக்கு மீறிய வேலைகளைச் செய்வதாகிவிடும். அதுவே தான் கடந்த பல ஆண்டுகளாக உண்மை. மேலும் தங்கள் அமைப்பு 6 மா.லெ இயக்கங்களை ஒன்றிணைத்து கூட்டமைப்பை ஏற்படுத்தி உள்ளதையும் தாங்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்திற்கு சான்றாக காட்டுகிறீர்கள். இத்தகைய கூட்டமைப்புக்கள் எல்லாம் அடிப்படை அரசியல் தத்தவார்த்த புரிதலிருந்து உருவானதல்ல. மாறாக நடைமுறைத் தேவைகளிலிருந்து உருவானது. ஆகவே தான் இந்தக் கூட்டமைப்பும் வருங்காலத்தில் காணாமல் போய்விடும் என்று கருத இடமுள்ளது என்று கருகிறோம்.

(2) ரஷ்யா, சீனா மாற்றங்கள் 1953-க்கும், 1976-க்கு பின்னும் நடந்தேறியது என்று சொல்வது இயங்கிலாகிவிடாது. அதே நேரத்தில், அதற்கு முன்பே - மாவோ, ஸ்டாலின் காலத்திலேயே அவர்களது எதிர்ப்பையும் மீறி படிப்படியாக (அளவு ரீதியாக) வளர்ந்து மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் குணமாற்றத்தை வெளிப்படுத்தியது என்பதில் எமக்கு உடன்பாடே! இதற்காக ஸ்டாலினுக்குப் பின் மாவோவிற்குப் பின் என காலவரையை துல்லியமாகச் சொல்வது சரியல்ல. எந்திரவியலான பார்வையும் ஆகும்.

(3) புரட்சிக்கு பிந்தைய ரஷ்யா, சீனாவிலும் உருவாக்கப்பட்ட தொழிற்சாலைகள், கூட்டுப் பண்ணைகள் சாரத்தில் அரசு முதலாளித்துவமாக உள்ளது. இது, வளர்முக நாடுகளில் உருவாக்கப்பட்ட அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களுக்கு இணையானதே! ரஷ்யா சீனாவில் குறிப்பாக விவசாயிகள் சுரண்டப்பட்டு தொழிலாளி வர்க்கம் போன்றோர் லாபமடைவதாக அரசின் செயல்பாடு அமைந்தது. அதே போலவே தான் நமது வளர்முக நாடுகளின் அரசு முதலாளித்துவ செயல்பாடு உள்ளது. இதை உ.ம். கொண்டு விளக்குவோம்.

தமிழகத்தில் அரசுத்துறை போக்குவரத்துக் கழகம் மக்களின் போக்குவரத்தை பெரும்பான்மையாக நிறைவு செய்கிறது. தற்போது பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டது. அரசு சொன்ன காரணம் நஷ்டத்தில் செயல்படுவதே! அதை ஈடுகட்ட உயர்வு தவிர்க்க இயலாது; மேலும் பேருந்து கட்டணம் மற்ற மாநிலங்களை விட குறைவு தான் என்றும் முதல்வர் எடுத்துக் காட்டினார். ஆனால் உண்மை என்ன?

(1) பேருந்து கட்டணம் உயர்த்தியது, மூலம் அரசு போக்குவரத்துக் கழகம் செயல்பட அடிப்படையாகிறது. அதே நேரத்தில் பேருந்து கட்டண உயர்வு,

படிப்பகம்

www.padippakam.com



தனியார் பேருந்து முதலாளிக்கும் பொருந்துவதால் அவர்கள் கொள்கை லாபம் அடிக்க அரசே முன் நிற்கிறது.

(2) இந்த போக்குவரத்துக்கழகம் நஷ்டத்தில் இயங்க காரணம் நிர்வாகச் சீர்கேடே ஆகும். அதை ஒழிக்க எந்த கட்சியும் - குறிப்பாக மா.லெ கட்சி உட்பட யாரிடமும் உருப்படியான திட்டம் எதுவும் இல்லை. இந்த அரசுத்துறை நிறுவனத்தையே சரியாகச் செயல்பட வைக்க திட்டமில்லாதவர்கள்; புரட்சிக்கு பின்னால் சமுதாயம் முழுமைக்குமான பொருள் உற்பத்தி நிறுவனங்களை - தொழிற்சாலைகள் - விவசாயப் பண்ணைகளை எவ்வாறு நிர்வகிக்க முடியும் என்ற கேள்வி எழுவது இயல்பே! புரட்சிக்குப் பின்னால் எல்லாம் சரியாகி விடும்; நாங்கள் (பொதுவுடமை இயக்கம்) தலைமைக்கு வந்தால் என்று கூறுவது கற்பனாவாதமாகவே எஞ்சி விடுகிறது காண்க.

(3) அரசுத்துறை நிறுவன செயல்பாட்டை ஒழுங்குபடுத்த முடியாதனின் காரணமாகவே பேருந்து கட்டணம் உயர்த்தப்படுகிறது. இது இன்னொரு புறம் வெகுசனங்களின் உழைப்பை சுரண்டு (கட்டண உயர்வு மூலம்)வதாகிறது. இதன்மூலம் பயன்பெறுபவர்கள் அந்நிறுவனப் பணியாளர்கள் - தொழிலாளிகள் உள்ளீட்டோர் ஆகிறது. இது ரஷ்யா, சீனாவில் விவசாயிகளை சுரண்டி, தொழிலாளிகள் அதிகார வர்க்கம் உருவாக்குவதற்கான அடிப்படையே ஆகிறது. மாவோ இந்த அதிகார வர்க்கம் மற்றும் தொழிலாளி வர்க்க நலன் - விவசாயி வர்க்கத்தை சுரண்டுவதாக இருத்தல் கூடாது என்ற விமர்சனத்தை காண மறுப்பதாகிறது.

(4) அரசுத்துறை நிறுவனம் தனியார்த்துறை நிறுவனத்தைவிட அளவில் பெரியதாகவும் கூடுதல்வசதி வாய்ப்புக்கள் உள்ளதால் லாபம் அதிகமாக இருத்தல் வேண்டும். எனவே பொதுமக்களுக்கு அரசு, பேருந்து கட்டணத்தை உயர்த்தாமல் குறைக்கின்ற நடவடிக்கை இருத்தல் வேண்டும். இதை செய்ய வேண்டுமெனில் நிர்வாகத்தை சீர்செய்வது மூலம் சாத்தியப்படுத்தலாம்.

(5) தனியார் மயமாக்கல் எதிர்ப்பை முன்நிறுத்தும் அனைத்து பொதுவுடமை இயக்கங்களும் இந்த கூரிய வேறுபாட்டை கணக்கில் கொள்வதில்லை. அரசுத் துறை நிறுவனங்களை தனியார்க்கு விடக்கூடாது என்ற கோரிக்கை கடைசியாக பார்த்தால் அந்நிறுவன பணியாளர்கள் அதிலும் குறிப்பாக தொழிலாளி வர்க்க நலனை முன்னிலைப்படுத்துவதாகும். இவ்வர்க்கம் அடுத்த வர்க்கங்களை சுரண்டுவதன் மூலம் - (மறைமுகமாக) - வாழ்வது உறுதிப்படுவது - எங்ஙனம் புரட்சிகரமான நடவடிக்கையாக இருக்க முடியும்.

அரசுத்துறை பொதுத்துறை நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் சாரமாக பார்த்தால் ஏகபோக முதலாளித்துவ நாடுகளில் உருவான பிரபுக்குல பாட்டாளிவர்க்கத்துக்கு இணையானவர்கள்.

ஆலைகளில் வேலை செய்வதாலேயே அவர்களை தொழிலாளி வர்க்கமாக பார்க்க வேண்டும் என்பது தங்களது விருப்பத்திலிருந்து பார்ப்பதாகிறது. இவர்களை பிரதிநிதித்துவம் செய்வதாலேயே தான் சி.பி.ஐ. சி.பி.ஐ.எம். சந்தர்ப்பவாதத்திற்கு இரையாயினர். ஆனால் தாங்கள் எதிரி வர்க்கத்தை (ஏகாபோக முதலாளி வர்க்கம் - தரகு முதலாளி வர்க்கத்தை) மதிப்பீடுவதில்

படிப்பகம்

www.padippakam.com



செய்த தவறு தான் எனச் சொல்வது சரியல்ல; இது ஒருதலைபட்ச பார்வையாகும்.

(4) சுருக்கமாகச் சொன்னால்...

தாராளமயம், உலகமயம் தனியார்மயம் என்பது நமது எதிர்ப்பையும் மீறி செயல்முறைப்படுத்தப்படுகிறது. மா.லெ குழுக்கள் உட்பட அக்கொள்கை நடைமுறை செயல்படுத்தவிடக் கூடாது என்றபடி தான் புதிய சனநாயகப் புரட்சி திட்டத்தை முன்வைக்கின்றனர். தாராளமயம், உலகமயம், தனியார்மயம் செயல்படுத்தப்படுவதன் விளைவாக சமுதாயத்தில் நடைபெறும் நடைபெறப் போகும் மாற்றங்களை கணக்கில் கொள்ள மறுக்கின்றனர். அந்த விளைவுகளின் சூழலில் சமுதாய மாற்றத்தை - புரட்சிக்கான திட்டம் குறித்த பார்வை இல்லை.

தாராளமயம், உலகமயம், தனியார்மயம் முதலாளி வர்க்கங்களுக்குத்தான் நலன் பயக்கக் கூடியது என்று சொல்வதும் கூட ஒற்றைப் பரிணமானமாக சமுதாயத்தை பார்ப்பதாகும். பாட்டாளி வர்க்கம் புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தன்னை தயார்படுத்திக் கொள்ளாமல் தாராளமயம்.... நமக்கு தீங்கு பயக்கக் கூடியது என்று பேசுவது சரியல்ல. வர்க்கப் பார்வையை வளர்ப்பதும் அல்ல. தொலைநோக்குச் சிந்தனையை இல்லாததை வெளிப்படுத்துவதும் ஆகும்.

(5) தாராளமயம், உலகமயம், தனியார்மயம் கொள்கை செயல்படுத்தப்படுவதன் காரணமாக.....

சந்தையில் ஒருபொருள் அதிகமாக வந்தால் விலை குறையும். குறைவாக வந்தால் விலை அதிகமாகும். இந்த விதிப்படி தொழிலாளர்கள் தங்களது உழைப்பை விற்பதும் கூட சந்தைமயமாகிறது. அதிகமான தொழிலாளர்கள் குறைவான வேலைநிலைமைகளில் பணியாற்ற முன்வரும் போது தொழிலாளர்களிடையே போட்டி அதிகரிக்கும். எனவே உழைப்பு கூலி குறைந்துவிடும். இது நம் போன்ற நாடுகளில் வெகுவிரைவில் காணப்போகிறோம்.

இதன் விளைவாக ஒவ்வொரு தொழிலாளியும் கூட, தான் செய்யும் வேலைமூலம் கிடைக்கும் கூலி உணவு, உடை, இருப்பிடம் வசதி செய்து கொள்ள போதுமானதாக இருக்காது. தனது தேவைக்கே அவர்கள் வேலை செய்வது போதாத போது அவர்கள் மனைவியும் - (பெண் தரும்) வேலைசெய்ய (பொருள் உற்பத்தியில் ஈடுபட) தூண்டுகிறது. ஏன் குழந்தைகளும் கூட ஈடுபடத் தூண்டுகிறது.

இவ்வாறான நிலைமை முதலாளித்துவ சமுதாயத்தில் வரும் காலத்தில் தொழிலாளி வர்க்கத்தினரால் குடும்பம் வைத்து நடத்த இயலாது; தானே சரக்காக மாறிவிடும் சூழலில் மனைவிகள் குழந்தையும் கூட சரக்காக (வாங்குவதற்கும் விற்பதற்குமான பொருளாக) மாறிவிடுவர். எனவே பாலின வேறுபாடு கடந்து தொழிலாளி வர்க்கமானது இழப்பதற்கு ஒன்றுமில்லாத வர்க்கமாக மாறுவது தவிர்க்க இயலாது.

இங்கு இத்தோடு நிறுத்திக் கொள்வோம். மேலும் விபரத்திற்கு தங்கள் கடிதம் கண்டு!

தோழமையுடன்,

ஆர்.

படிப்பகம்

www.padippakam.com



# உறவு வாசகர் சந்திப்பு II
# செய்திப் பதிவு

ஜுன் 4, 2000 - அன்று காரைக்குடி மாநகரில் பேராசிரியர் சே.கோச்சடை அவர்கள் தலைமையில் உறவு வாசகங்களின் இரண்டாவது சந்திப்பு நிகழ்ந்தது. சிவகங்கை, புதுக்கோட்டை, மதுரை, திருவாரூர் மாவட்டங்களில் இருந்து தோழர்கள் கலந்த கொண்டனர்.

மதுரையில் நடைபெற்ற முதல் வாசகர் சந்திப்புக்கு பிந்தைய நிகழ்வுகளையும், கடந்த இரண்டாண்டுகளில் உறவு'ன் பணிகள் குறித்தும் இதழாசிரியர் பாலா தம் உரையில் குறிப்பிட்டார். பேராசிரியர் கோச்சடை அவர்கள், "அமைப்பு ரீதியான செயல்பாடுகளின் அவசியம், கருத்தியல் அரங்கின் நடைமுறைகள் பணிகள் ஆகியன" குறித்து தலைமையுரையில் விளக்கினார்கள்.

★ உறவு - மூன்றாவது வாசகர் சந்திப்பை மதுரையில் ஒருங்கிணைப்பது
★ உறவு பணிகளில் கூட்டு செயல்பாடுகளை துரிதப்படுத்துவது
★ கருத்தியல் மற்றும் கருத்தியல் சார் நடவடிக்கைகளுக்காக உறவு வாசகர்களிடையே அமைப்பு ரீதியான முயற்சிகளை மேற்கொள்வது. ஆகிய முடிவுகளை, இந்த இரண்டாவது சந்திப்பு எட்டியது.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சந்திப்பை வாழ்த்தி வரைந்தனுப்பப் பட்ட கடிதங்களை வாசித்ததுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

அடுத்த சந்திப்பு குறித்த தகவல் பின்னட்டையில் உள்ளது

அவசியம் வாங்க.

---

# எக்ஸில்* ஷோபா சக்திக்கு ஓர் வேண்டுகோள்

எக்ஸில் - *9*வது இதழில் (நவ-மார் *2000)* சக்தி ஷோபா "அ. மார்க்ஸ் ஓர் இடைமறிப்பு" என்ற நேர்காணல் தொடர் வந்துள்ளது. அதில் பின் நவீனத்துவத்துக்கு முறையான, சரியான, பதில் இடது சாரி வட்டாரத்தி லிருந்து பதில் எதுவும் இல்லையெனக் குறிப்பிட்டுள்ளார்.

பின் நவீனத்துவ விமர்சனம் குறித்து உறவு-*2, 4, 6,* இதழ்களில் எழுதி உள்ளோம். அது குறித்து அ.மார்க்ஸ் மௌனமாகவே இருந்து வருகிறார். இதை ஷோப் சக்தி அறிவாரா? அவராவது பதில் அளிக்க முன் வருவரா?

---

* எக்ஸில் எனும் பின் நவீனத்துவ பார்வை உடைய காலாண்டு இதழ் பிரான்சிலிருந்து வருகிறது. இதுவரை 9 இதழ் வந்துள்ளன.

முகவரி : CXIL, B.P.-204, 92604 Asnieres Cedwse, France.

படிப்பகம்

www.padippakam.com

# உறவு வாசகர் சந்திப்பு III

# பேராசான் மார்க்சின் "பாயர்பாக் ஆய்வுரைகளும் இன்றைய மார்க்சியர்களும்"

## - கலந்துரையாடல்

**உதயம் கல்வி மையம்**
(பாரதி ஜீவா நூலகர்)
கே.எஸ்.காம்ப்ளக்ஸ்
(மகாத்மா காந்தி நகர்)
மதுரை - 14

நாள் :
**6-8-2000 ஞாயிறு**
மாலை 4 மணி

தலைமை : **வழக்கறிஞர். இந்திரா**

பங்கேற்பு : **பேராசிரியர். சே.கோச்சடை**
**வழக்கறிஞர். சரவணக்குமார்**
**இதழாசிரியர். பாலசுப்பிரமணியன்**

**இவர்களோடு நீங்களும் அவசியம் வாங்க.**

அச்சாக்கம் : ✓ பாண்டியன் [illegible] அச்சு. மதுரை-1. ✆ 746927
படிப்பகம்